DECEMBER 2022 **P/ID 35311/PTL1A**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடை எழுதுக.

1. பாஞ்சாலி சபதம் - நூல் அமைப்பினை எழுதுக.

2. பாரதியார் - குறிப்பு வரைக

3. தேர்ப்பாகனைப் பார்த்து பாஞ்சாலி கூறிய மறுப்புரை யாது?

4. விதுரனின் குணநலன்களைக் குறிப்பிடுக.

5. பாண்டியன் பரிசு - பொருள் தருக.

6. நரிக்கண்ணனின் சூழ்ச்சியைச் சுட்டுக.

7. கதிரை மன்னனை அறிமுகப்படுத்துக.

8. ஈரோடு தமிழன்பன் எழுதிய நூல்களைக் குறிப்பிடுக.

9. வள்ளுவரின் எழுத்தாணிக்கு ஆசிரியர் ஆசைப்படக் காரணம் என்ன?

10. இராமானுஜரின் கல்வி குறித்து எழுதுக.

11. இராமானுஜரின் சீடர்கள் யாவர்?

12. வைணவப் பரவலுக்கு இராமானுஜர் ஆற்றிய பணியினை எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடை எழுதுக.

13. சூதாட்டக்களத்தில் தர்மனின் செயல்பாடுகளை எடுத்துரைக்க.

14. துச்சாதனனுக்கும் பாஞ்சாலிக்கும் இடையே நடந்த உரையாடலைத் தொகுத்துரைக்க.

15. வேலன் கதாப்பாத்திரத்தை மதிப்பிடுக.

16. கதிரைவேல் மன்னன் மற்றும் கண்ணுக்கினியாளின் இறப்பிற்கான காரணத்தை விளக்குக.

17. "தன்மைகளும் உண்மைகளும்" என்னும் தலைப்பில் தமிழன்பன் கூறுமாற்றைத் தொகுத்துரைக்க.

18. இராமானுஜரின் இளமைக்கால வாழ்வியலை எடுத்துரைக்க.

19. இராமானுஜர் நாடகத்தின் தனித்தன்மைகளை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடை எழுதுக.

20. பாஞ்சாலி செய்த சபதத்தினை விவரிக்க.

21. துரியோதனன் கதாப்பாத்திரத்தைத் திறனாய்க.

22. பாண்டியன் பரிசு தனித்து இயங்கத்தக்க நற்றமிழ்க் காப்பியம் என்பார் தம் கூற்றை ஆய்க.

23. தமிழன்பனின் கவிச்சிறப்பை வணக்கம் வள்ளுவத்தின் வழி நின்று விளக்கியுரைக்க.

24. இராமானுஜர் ஏழை எளிய மக்களுக்கு ஆற்றிய தொண்டினை விரித்துரைக்க.
